100

கர்ப்பம் பற்றிய குறிப்புகள் இல்லை

103 ✓

I

தேரையர் கியாழ முறை -100

தேரையர் அருளிச் செய்த

கியாழ முறை 100

பித்த சுரக் கஷாயம்

1. அ. புகலுஞ் சீந்தில் பற்படாகம்
பூகஞ் சந்தனம் மிலாமிச்சம்
திகழும் வேர்க்கொம் பிருவேலி
சித்தா முட்டியுடன் முத்தகாசும்
தகவோ யொவ்வொன் றோர்கழஞ்சு
தண்ணீ ரிருநாழியி லிட்டு
தகமாய்க் காச்சிக் குடிப்பீராய்
சோரும் பித்த சுரந்தானே. 1.

வாத சுர கஷாயம்

தூது-வளை யின்-பூர லாடா தோடை
சொன்ன சங்கின்வேர் சுக்குவிழி கூட்டி
மாதுவளர் திப்பிலியும் பற்ப டாகம்
வழுதலையுங் காலியுடன் சமனாக் கொண்டு
வேதுவிட நீர்நான்கு யெட்டொன் றாக்கி
யிதனுடனே தேன்கூட்டி யிசைந்தே யுண்ண
திதுபரி சுரம்-வாய் வுசுரம் வாதத்தின்
சேர்ந்தசுரம் யிவையனைத்தும் சேரா தென்னே. 2.

அய்யசுரம்

தூசிவளை சீமாநெல்லி சங்கின்வேர் சுக்குத் தோடை
பேதைநந் சிறுதேக்கு திப்பிலியும் பின்னை
நாதமாஞ் செவ்விளந்தோல் நல்லநீர் நாலான்றாக்கி
வேதமா அய்ய சுரங்களும் விட்டுப்போமே. 3.

சேத்தும சுரம் கஷாயம்

ஆடா தோடை சிறுதேக்கு
படரும் கையாந் தகரைசங்கு
தோடா வேரும் யொரும்பில்
சுக்கு சேந்தசமன் மிளகுகொண்டு
ஆ. வாடா நீர்வார்த் தெட்டொன்றாய்
வருந்த தேனு முடன்கூட்டி
போடா நீருள்க் கொள்வீராய்
பொத்தும் சேத்தும சுரம்போமே. 4.

வயிற்று நோய்க்கு கஷாயம்

நிலக்குமிழ்வேர் சிறுதேக்கு தேவ தாரம்
நிலவேம்பு பற்படாகம் கடுக்காய் சுக்கு
துலங்குமிகு முத்தமொடு வசம்பு நேராய்
சொன்னிநீ ரிருநாழி சுவறக் காச்சு
கலக்கமிலா தெளைக்கூட்டி கியாழங் கூட்டிக்
கலந்துழக்கு மருந்துகொள்ளக் கடிய வையம்
விலக்கரிய வயிற்றுளோவு யிளைப்பு தீரும்
வேதமுனி தானுரைத்தாற் விளம்புங் காலே. 5.

பித்த சுரம் கஷாயம்

யிடித்த அத்திப் பட்டையுட
விசையுங் கதலிப் பழம்பிசைந்து
வடித்த நீரும் நெல்லிக்காய்
வருத்துஞ் சாறுடந் தான்கூட்டிப்
பிடித்து வறுத்துச் சீரகமும்
பிரியமுடன் சர்க்கரை கலந்து
குடித்த போதே பித்தசுரங்
குறுகா தோடிப் போய்விடுமே. 6.

குளிர் சுரம்

காவேளை வேலிப்பருத்தி கஞ்சாங் கோரை
    கைத்தாழை முடக்கொத்தான் கடிய சுக்கு
2. அ. தேவைமிளகு சிறுதேக்கு சிறுகாஞ் சொறி
    சிரவேம்பின் பட்டை யதிற்சிறந்த யிறகு
மேவு சங்கம் பட்டையுடன் பதக்கு நீரில்
    வெந்துகொள்ள சீதங்கள் சுரங்க ளெல்லாங்
கோவைநறுங் கனிவாயாய் முனிவாய் வந்த
    குளிர்மாறல் சுரம்மிஞும் கொள்ளு கொள்ளே. 7.

வாத சுரம்

தூதுவளை யின்பூர லாடா தோடை
    சொன்சைங்கின் வேர்சுக்கு நாழி கட்டி
மாதுவளர் திப்பிலியும் மிக்க சித்தா
    மல்லிபேறா மல்லிமுல்லை வில்லைகண்டங் காலி
பாதிரிகோலே தேக்கநிலக் குமிழிமுத்த நிலவேம்
    போடே தருவாக திப்பிலியு மிளகுமல்லாற்
சுக்குமிகு நெருஞ்சிலொடு தொன்டை சிந்தில்
    சுகமான பலப்பாடகஞ் சரியாய்க் கொண்டு
பக்குவமா யிருநாழி யெட்டொன் றாக்கி
    பருகில்வெகு வாதசுரம் பறந்து போமே. 8.

பித்த வாத சுரம் கஷாயம்

முத்த காசு பத்பாடகம்
    முதிலா மிச்சு யிருவேலி
சுற்ற சுக்கு சந்தனமும்
    சுகமாய்க் காச்சிக் குடிப்பீராய்
சித்தப் பிரமை யுடன்பிறந்த
    தேனே மானே சிலைக்கண்ணாய்
பித்தத் துடனே வாதசுரம்
    பேசா தோடிப் போய்விடுமே. 9.

விஷ சுரத்துக்கு

சுக் கு கடுக்காய் நிலவேம்பு
    தோலு மாடா தோடைசீந்தில்
கைக்கும் புடலம் பொடியதுவும்
    கதிக்க மிதுவொவ் றொர்கழஞ்சு
2.ஆ. வொக்க நருக்கி யிருநாழி
    யுழக்காய்க் காச்சி யுண்பீராய்
தக்க விஷமிச் சுரமதுவும்
    தாவ்விட் டோடுந் தப்பாதே. 10

தோஷ சுரத்துக்கு

சித்தா முட்டி பசும்பயறு
    சிறந்த பல்ப்பாடகம் வில்லையொடு
கொத்த மல்லி சமனாக
    குறுக நீர்விட் டெட்டொன்றாய்
மெத்தப் பருகி ---------
    மெய்யாய்க் காச்சிக் குடிப்பீராய்
நித்தத் தடந்த தோஷமது
    நிலைவிட் டோடும் நிஜந்தையமே. 11

சுரத்துக்கு

சிறுகாஞ் சோரி குறுந்தொட்டி
    சிறந்த சுக்கு சீந்தியொடு
மறுவா தோடை வெப்பிறகு
    வருவாம் பல்ப்பாடகஞ் சமன்கொண்டு
மறுகா நீர்விட் டெட்டொன்றாய்
    மறுகா நீச்வி' காச்சிக் குடிப்பீராய்
குறுகா தோடுஞ் சுரங்களெல்லாம்
    கோடா கோடி யோட்டிடுமே. 12

குளிர் சுரத்துக்கு

ஆடா தோடை பேய்ப்புடல்
யடருஞ் சீந்தில் பற்பாடகமும்
நீடாங் கண்டங் கத்திரிவேர்
3. அ. நிலவேம் புடனே நின்றசுக்கு
வாடா குடிநீ ரெட்டொன்றாய்
வடித்துத் தேனில் கொள்வீராய்
கோடா கோடி சுரம்விட்டு
குளிருந் தாகஞ் சுரம்விடுமே. 13

அதிசார சுரத்துக்குக் கஉஷாயம்

நெல்பொரியும் பசும்பயறு வில்லை முல்லை
நெறியசீ ரேலமுடன் நெல்லி முள்ளி
முற்படவே யிருநாழி ரெட்டொன்றாய்
முதிறநிரை யிறுத்தருந்த முதந்த பேர்கள்
சொற்பெரிய சத்திகுன்மம் மதிசார சுரமும்
துயமுடன் கிறுகிறுப்பை வழலை மூச்சு
நற்பெரிய முனியுரைத்த படியெல் லாலும்
நாடாதென்றே யுரைத்த நலமிது தாமே, 14

தாபம் அதிசாரம் சுரம்

முகமா தளம்பிஞ்சு அதிவிடையம்
    முத்தக் காசு பெருமரத்தோல்
தகைசுக் கு-விளாங் காயுஞ்
    சமளாய் யொல்நோன் நோர்கழுஞ்சு
வகையாய்க் கூட்டி யிருநாழி
    யுழக்காய் காச்சி வைத்தருந்த
பகையாய் வந்த அதிசாரம்
    பாரீர் பாரிர் பாரீரே. 15

தாபம் அதிசார சுரம்

மாவட்டி புகழ்நாவல் கொழுந்து புளியாரை
    வளக்குரிஞ்சி நுனாவிலை கருவாழைப் பூவுந்
தான்வகைக் கொருகழுஞ்சு விருநாழி நீரில்
    தகபெற கழக்காக்கு தளதொடித் தடனே
ஆ. பூவில்வருந் திப்பிலியும் வெண்காரங் கூட்டிப்
    பொருந்துநிற மென்பொடியும் புகழுவே கொள்ளே
தாவில்வருந் தாகமோ டதிசார சுரமுந்
    நாலுநாள் மாறல்லுட ளாச மாமே. 16

அதிசார சுரத்துக்கு

கருவாங் கதலிப்-பூவு முத்தங்
களரும் விடத்தாரங் கொழுந்தும் தெங்கி
னுருவாம் பாளை பெருமரத்தோல்
ஒளிமா தளம்பிஞ் சிருகழஞ்சு
தருவாம் நீர்த்தெட் டொல்றாய்
சாலு மிலவம் பிசின்விடையம்
பெரும ரத்தியாகி கொண்டாக்கால்
அதிசா ரங்க ளொழித்திடுமே. 17

மாதளங் கடம்பு புங்கின்
வாய்த்தவேர் திப்பிலி யத்தி
மீதிலங் கொழுந்தும் சுக்கு
திரிபலை விரும்பிக் கூட்டி
நீதியா யின்டு நாழி
நிரருழக் காக்கிக் கொண்டால்
சூதின முலையி னாளே
சுரத்ததி சாரம் போமே. 18

அதிசார பேதிகள் சுரம்

கஷாயம்

முடித்துக் களைத்த கருங்குழலாய்
    முத்தக் காசு மரப்பட்டை
யிடித்து நனைத்துப் புட்டாய்ச்சுட்ட
    டறுசப் பிழிந்திட்ட அதிவிடையம்
துடித்த வில்வம் பிசின்லோடு
    தகமை பெறவே கொள்வீராய்
துடித்து விழுந்த அதிசாரம்
    சுரத்தைப் போக்குஞ் சொல்லோமே. 19

தென்னம் பாளை மொட்டுமுத்தஞ்
    சிதற யிடித்துத் திறமாகப்
பொங்கு விலைமேல்ப் புட்டாக்கிப்
4.அ. பிழிந்து தேனு முடன்கலந்து
வெங்கும் புகழு மதிவிடைய
    மிலவம் பிசினும் மிட்டருந்தால்
பங்கப் படுத்தும் அதிசார
    சுரத்தைப் போக்குஞ் சொல்லோமே. 20

யேல-மதி விடையம்-செங் கழுநீர்கோஷ்டம்
    மிலாமிச்சு யிருவேலி சந்தச்சு
பூலமிகு சந்தனம்நன் னாரிமுத்தமது
    பல்ப்படாகம் சமன்கூட்டி முன்னீர்விட்டு
கோலமுடன் யெட்டொன்றாய்க் காச்சியின்னைக்
    குடித்திடவே பித்தமுடன் குறுவேர்வோடு
காலமிகு தாபசுரந் தீருமென்று
    கருணையுடன் முனியுரைத்தார் காணலாமே. 21

விஷபாகம் வீக்கஞ் சுரத்துக்குங் கஷாயம்

முரிவிலி-நன் னாரியொடு வெள்வெங் காயமு
    முதிர்வசம்போ டிந்துப்பு கடுக்காய் நெல்லி
வருசுவர பூசினியும் பேய்ப்பா சுத்தி
    வளர்குறட்டை மால்காந்தம் வகையொன்றாக்கி
வெருகநல்ல நீர்விட்டுக் காச்சி யுண்ணப்
    பிலத்தசுரம் விஷபாகம் பெயர்ந்து போமே. 22

வாந்தி சுரம்

வில்வவேர் சங்கொடு விளா நன் னாரியும்
புல்லுவேர் பயறொடு நெல்பொரியும் வெல்லமும்
நல்லநீர் குறணியை நாழி யாக்கியே
சொல்லநீர் வாந்தியுஞ் சுரமும் சோருமே. 23

சன்னி வாதத்துக்கு

யேத்த சுக்கோ டரத்தை யெருக்கம்வேர்
நாத்த நொச்சில்க் கொழுந்து நாள்தமுஞ்
சேத்த நீ-ரு முக்காக்கி தினஞ்கொண்டால்
மாத்தலாஞ் சன்னி வாத சுரங்களே. 24

சுரத்துக்கு

முன்னை பாதிரியு முள்ளி
முதிர கண்டங்காலி கோரை
பின்னை தூ தளையுஞ் சீந்தில்
----- பேறா முட்டி
ஆ. சொன்ன காஞ்சோரியுந் தோடை
துளசி வெப்பலது நெண்ணி
நல்லில் கதுமுள் பேய்ப்புடலும்
நல்லவா வுகுவை கூட்டே. 25

கட்டி வெப்பலகு வித்து
    கொட்டநத் கொத்த மல்லி
வாட்டிய வரத்தை யோடு
    மதுரமும் மேலந் தானும்
நாட்டிய திரிகடுகு திரிபலையும்
---- ----- ------
தீட்டிநீ ரெட்டொன் றாக்கி
    செலுத்தவுடன் சுரங்கள் போமே. 26

தீராத ரோகங்களுக்கு கஉநாயம்

சிறுதேக்கு தோடையோடு கஞ்சாங் கோரை
    சேர்முதியார் கூந்தல்சிறு குறட்டை சோதி
வுறுசிறு காஞ்சோரி முள்ளிசா ணாத்தி
    யுந்தநீர் முள்ளிமட்டி யிரண்டு முன்னும்
மறுகு முக்கா வேளைவக் கணாவும்
    வளரும்பா வட்டை புங்கொடு அமுர்தவல்லி
கறுகுமுறு வலியாணா வேர்நன் னாரி
    கொத்தமல்லி சுக்குமுத்தங் கட்டி டாயே. 27

முத்தமால் காந்தியொடு கண்டங் காலி
    முதிர்படகம் வசம்புமுதல் முன்னீர் விட்டு
சுத்தமாய் காச்சியதில் கடுகு ரோகணி
    சுகமான சீரகமும் துலங்க கொண்டு
5.அ. மத்தநாள் முதலாக வரைத்துக் கொண்டு
    மானே யிப்புவியில் வளர்மாந்தர்க் கெல்லாம்
சித்தமாஞ் சுரங்கள்வெகு சோப வீக்கந்
    தீராத ரோகங்கள் தீர்ந்து போமே. 28

குளிருக்கு கஷாயம்

ஆடா தோடை நன்னாரி
    அகலுஞ் சிரிய வழுதலையும்
பாடா நிலங்கு பர்படாகம்
    பங்கம் பாளை வேர்க்கொம்பு
தேடா சீந்தில் சந்தனமும்
    செப்ப வரிய திவையணைத்தும்
கூடா நீர்விட் டுழக்காக்கி
    குடித்தால் குளிசிர்க் கெடுத்தாரோ. 29

சுகபேதி கஷாயம்

சீந்தில் தண்டும் கடுக்காயுஞ்
சீவதை வேரும் களிப்பாக்குங்
காந்தஞ் சுக்கு ரோகிணியும்
கல்லித் சருகுங் கலந்துகொண்டு
வெந்து முலையாய் நீர்விட்டு
யெட்டொன் றாக்கிக் குடிப்பீராய்
மந்த மான சுரம்தீரும்
வயிறு கழியுங் கண்டாயே. 30.

சுரங்கள் கஷாயம்

சிட்டச் சீந்தில் நிலவேம்பு
சிறுகாஞ் சோரி கொத்தமல்லி
வட்டத் திருப்பி முத்தமொடு
மகிழ்ந்து பொத்து விலாமிச்சு
வெட்டி வேரும் பொருதம்முதாரி
யுடனே கூட்டி நீர்விட்டு
திட்ட முடனே யெட்டொன்றாய்
செலுத்த சுரங்கள் சேராதே. 31

சுரங்கள் சுஉநாயம்

சேர்ந்த செங்கழுநீர்க் கிழங்கு
சிறுவழு தலையும் மிலாமிச்சுஞ்
சார்ந்த மூலி பொன்முசுட்டை
ஆ. தன்னோ டொக்க கொத்தமல்லி
வாய்ந்த முத்தம் நிலவேம்பு
வளர்பற் படாகம் சந்தனமும்
மெத்தநீர் விட்டுழ காச்சி
யிறுத்துக் குடிக்க சுரம்போமே. 32

வெதுப்பு சுரங்கள்

சீந்தில் வேரும் மிலாமிச்சம்
சிறுகாஞ் சோரி பற்படாகம்
வாய்ந்த முத்தக் காசுடனே
கொத்தமல்லி வளர்சுக்கு உள்ளிநிலவேம்பு
சேர்ந்த பத்தும் குடிநீர்
சிறுகக் காச்சிக் குடிப்பீராய்
வேந்த வெதுப்பை விடுவிக்கும்
விடாதால் விதியின் கொள்கையிதை. 33

காச்சலுக்கு கஷாயம்

பாதாள மூலி பழமரை யொன்றே
வியறன் றறிதாளி பக்குவத்தில்
சேந்தாலும் போது கருத்தெல்ல
லங்கள மாதே சிறுகநீர்
நாலி லொன்றாய் வன்னியுடன்
போமே மலம். 34

கொட்டைக் கறந்தை பாவட்டை
மற்றும் பிறமிக் கழைக்கொழுந்து
மொட்டிக் கொள்ளு மாடாதோடை
யுலாவி ஸ்ரீ-திவை யாறுங்
கட்டிக் கொள்ளும் காச்சலுக்கு
கஷாயம் வைத்துக் குடிப்பீரே. 35

காச்சலுக்கு-கஷாயம்

கடுக்காய் தூதங் கொத்தமல்லி
6.அ. கட்டியுளச்சும் வெண் கோட்டம்
எடுத்தார் சுக்கு நிலவேம்பு
பிரண்டு மட்டி யுடன்கூட்டி
பொடித்து தூளாக்கி நீரிலிட்டு
பொங்கக் காச்சி யெட்டிலொன்றாய
குடித்தார் தம்மை சுரம் விட்டு
குடிப்போ மென்று கூறியதே. 36

காச்சலுக்கு கஷாயம்

கார மட்டுங் கருங்குழல் செப்பவாய்
வார மட்டும் வன்முலை மாதுகேள்
பேர மட்டியுஞ் சுக்குங் குடித்தக்கா
லுரைவிட் டினியோடுஞ் சுரங்களே. 37

சத்திக்கு கஷாயம்

வில்வ பத்திரி வேர்சிறு பட்டையும்
வல்ல சுக்கு வளம்பெறக் காச்சியே
நல்ல தேனில் நயந்து குடித்திட்ட
கொல்ல வந்த சத்தி குறுகுமே. 38

இருமலுக்கு கஷாயம்

கண்டிலை தூ தளை யிசங்கு திப்பிலி
    கண்டறி சுக்குடன் கலந்து வெந்திநீ
ருண்டிடில் லொருதிர மிருமலும் லூ த்திடில்
தெண்டமுந் தருவன்யாள் தேற நல்லவே. 39

குடல் வாதம் வாய்வு சூலைக்கு கஷாயம்

கழல்மணி வெள்ளை யுள்ளி
    முருக்கந்தோல் வசம்பு தேனும்
..... சுக்குத் தாறு
    பருப்பிளி லுழக்காய்க் கொள்ள
குழலிடை யோசை யாகும்
    குடலில் வாதம்
ஆ. பழகிய சூலை தானும்
    பற்றிடா தோடிப் போமே. 40

கிராணி வாய்வுக்கு

யிருபலை முக்கா வேளை
    இசைந்த சுக்குத் தனியாகி
யொருபடி தண்ணி ரெட்டி
    லொன்றாக்கி காச்சி யுண்ண
வெருகிய கிராணி வாயுவு
    பெலத்திடும் குன்ம ரோகம்
பொருவது தேகம் விட்டுப்
    போவது திண்ணந் தானே. 41

வயிறு வலிக்கு

முருங்கைக் கிழங்கு கொடிக்கழல்வேர்
    முதசா ரணைவேர் வெள்ளுள்ளி
நெருங்கத் தாழை வசம்புடனே
    நெருப்பின் மிருந்த கொடிவேலி
யொருங்கத் தேய்த்த பெருங்காய
    முடனே காச்சிக் கொள்வீராய்
மருங்கச் சூழந்த நோய்களும்போம்
    வயறு வலியும் வாறாதே. 42.

நீரிழிவுக்கு கஷாயம்

நல்ல வெல்லம் பழந்தண்ணீர் நாழிநீர்
வில்ல பத்திரி பட்டை மகிழ்ந்துண்ண
தொல்லை வாரிசு வரிடு நீரிழி
வில்லை யில்லை யிராமன்கை பாணமே. 43

ஆவர ரந்துளிர் கல்மதங் கொன்னை
வேர்நீர் விரைந்து புளிமோரி லுண்பீரால்
நீவிரைந்து வானுந் திரைக்கடலுகா
விரைந்து வரினுங் கடக்குமே. 44

ஆவரை கொன்னை நாவல்
அலைகட விழுஞ்சி முத்தங்கோஷ்டம்
மேவிய மருதந் தோலும்
விரைத்தட னொக்க கொண்டு
பூவிழி குழலி னாளே
பொருந்துநீர் தன்னை யுண்ண
காவிரி நீரும் வத்தி
கடல்களும் வத்துந் தானே. 45

நீரிழிவுக்கு

திருந்திய விளாவு வாரை
செப்பிய வரட்பூ லாவோ
டிருந்திய யிலந்தை காட்டு
மல்லிகை யிவையுங் கூட்டிப்
பொருந்தவே மேதி மோரில்
புகழ்பட வேக வைத்து
வருந்திடில் தயிலிலப் போது
அகன்டிடுஞ் சலங்கள் தானே. 46

தேத்தா ... விரை கடுக்காய்
செப்பாரி யாவரை வித்தோ
டேத்தா விளாம்பிசினி னோடு
இத்தனையுங் கொற்றொடியாய் பங்கொன்று
காலாய பசுவின் மோரிற்பருக
பெருகிவரும் நீரிழிவும் போகுமே. 47

மேகத்துக்கு

வல்ல சுரம்போம் மாந்தமொடு தோஷம்போ
சொல்லவெகு மேகம்போம் சோகைபோம் - நல்லாய்கேள்
தாலவெல்-லஞ் சுக்குடனே சத்தே நிலக்குமிழுங்
காலமே காச்சியுண்ணும் போது. 48

கல்லடைப்புக்கு

கீழா நெல்லி வேர்கழஞ்சு
கிளர்போற் கடுக்கா யிருகழஞ்சு
காள முளகு முக்கழஞ்சு
ஆ. கடுக்கப் புளித்த மோருடனே
தாளாணை துண்ண மண்க்கழலுந்
தழைத்த வயறுந் தளர்வாகு
மாழவா ருண்ட நீரென்று
அரனா ரருளிச் செய்ததுவே. 49

நீர்க்கட்டுக்கு

மாவிலங்கு வளர்நிலத்தில் வடக்கெழுந்த வேரும்
வழிவிலங்கு முள்ப்பாயும் வளைநெருஞ்சி வேரும்
பேயிலஞ்கும் சுடுகாட்டில் பிறாமுட்டி வேரும்
பெரும்பிளை யதனிற் சிறுபிளை வேரும் குழல்மடவீர்
யெட்டொன்றாக் காச்சி தன்கையி னாலேகொடுத்தனை
யென்கையிலே வாங்கி வாயிலங்க வைத்தடிலோர்
கல்லுவிழு முள்ளே மடுத்திடிலோர் காய
யிந்திட்டா டுத்த கல்லும் விழும்மே. 50

சோபத்துக்கு

முருவிலி மாவிலை தூ தளை -----
வரியூரி மனலி நன்னாரி கோவை
----- காட்டியோ டொக்கக் கூட்டினார்
சுரிசுரி சுரும்பென சோப மாறுமே. 51

பெருமரப் பட்டை நன்னாரி
    பெருந்த குடசப் பாலையுடன்
வருமா தளையின் பொன்முசுட்டை
8.அ.   மருவும் வில்லை வெட்டிவேர்
தருலா மிச்சம் முத்தமொடு
    தந்த சீத்தில் அதிவிடையம்
மருளா மிதலில் காட்டத்தி
    யதிக்கி ராம்பு மருந்திடுமே. 52

நீர்க்கட்டுக்கு

மாவேகேள் நீரடைக்கில் வாழும் பசரியுடன்
தானேநல் கத்திரியின் தன்னிலையும் கொத்தமல்லி
பாளைதனி லொக்கக் கியாழமிட்டு லூதும்
வெங்கார மிட்டுக் காச்சிக்கட லுடைக்குங்கான். 53

சன்னி சுரத்துக்குக் கஷாயம்

பெருவாகை பெருங்குமிள் வேரோடு
பாரில் முன்னையும் பாதிரி வேரோடு
காரை சிங்கு கத்தாதி நெருஞ்சிவேர்
நீர்மல்லி யிவைதிசை மூலமாமே. 54

கதிரோ னெவைவெதி மூலக்
    கஷாயத்தால் பிணிநீங் கிடவே
சதிரான வாகை குமிள்முன்னை
    சாற்றும் பாதிரி வில்வமுடன்
புதிய மிளகு கறிமுள்ளி
    பொத்தும் நெருஞ்சி யிருமல்லி
முதிரக் காய்ச்சிக் குடிப்பீராய்
    முரச்சை சன்னி சுரம்மாறும். 55

அஷ்ட திசைமூலம் கஷாயம்

சீர்பெரிய வேருவகை பெருங்குமிள் முன்னையொடு
ஆ. சித்தா மல்லி பேறா மல்லி
சீரான பாதிரி நெருஞ்சி
சிறுவமுதலை திடமான கூவளையுடன்
பார்பெரிய கோஷ்டமொடு சீந்தில் ஆடாதோடை
பற்படாக மொடுசுக்கு பகர்கண்டங் கத்தரியுமே
யேர்பெரிய மருந்தெல்லாம் சமனாய்க் கூட்டி
யிதமாக விடித்ததனை யுணத்தீரு மெள்ள
வார்பெரிய திரிதோஷம் சந்நி தோஷம்
பிறதாபம் மூர்ச்சைகளும் ஆம தாபம்
பேர்சொல்லி நிறுத்துமே அஷ்ட திசை
மூலகெனப் பேச லாமே. 56

பல் நோவுக்கு கஷாயம்

மருக்காரை சுக்கு மருதந்தோல் வெள்வேலி
லெருக்கு பிரமமோ டேழும் – நறுக்கியே
நாலொன்றாய்க் காச்சி நாலுநாள் கொப்பளிக்க
பாலன் – பல் லாங்கிழவன் பல். 57

பல்லு தேய்க்கிற பொடி

காசு கட்டிப் பலமொன்று
    கலந்த கடுக்காய் பலமுமரை
நீதிக் கான யிந்துப்பு
    நிகரும் மாசிக் காயுடனே
பாச மான படிக்காரம்
    பகரொவ் வொன்றுக் கால்பலமா
யிசத்துடனே பொரித்தெ டுத்து
    விதமாய் சீனைக் காரத்தே. 58

யேக மாக் யிதெல்லா
    யிடித்துச் சூரண மாய்பண்ணி
தேகத் திதமாய் தந்ததில்
    தினமும் நன்றாய்த் தேய்த்திடவே
வாச மான முகவாதம்
    வரையும் பல்லுக் கடுப்படங்கும்
மேச மான தெந்தசைவும்
    போமிறுகப் பிடிக்கும் கண்டாயே. 59

வலம் வெப்பு சுரத்துக்கு உபாயம்

கொல்றே தோலுங் கொத்தமல்லி
குமரிச் சாறுங் கடுக்காயும் சிவதை யிந்துப்பு
மொன்றைக் காச்சி ரோகணியு
9.அ. மொக்கக் கலந்து குடிப்பீராய்
கன்னிற் கிடந்த மலமதிரட்டுங்
கடுகக் கழியும் வகைசொல்வோம்
விண்ணில் பெரிய வேந்தர்க்கு
வெப்புஞ் சுரமும் வாராதே. 60

சுரத்துக்கு உபாயம்

கூறுகின்ற பாவட்டை கொண்டுறைசிறு மட்டியுடன்
வீறுடன்வே லிப்பருத்தி வேரிவையில்-காறுகின்ற
நல்மிளகு கூட்டி நலமாய்கி உபாயமிட்டு
சென்மமில்லை யாஞ்சுரமே செப்பு. 61

பிறிந்தவின் வெள்ளீரில் பிறமுதியார் கூந்தல்
வரிந்துவதன் வேரை யரைத்துத் தின்னப்
பறிந்துவிடுங் குன்ம மஞ்சும்போம் குளிருஉண்ணத்
சிரிமித்சுரம் போமிதனைக் கேட்டு. 62

கிராணி அரோசிகம் கஉதாயம்

விட்ட .... பீர்க்கு மேவுகருவம் பீர்க்கும்
முட்டசுக்கு சீரகமும் மோதகமுந் - தட்டியிட்டுக்
காய்ந்தநீர் கொள்ளக் காலும் ரோகிமும்
பாய்ந்தகி ராணியும்போம் பண்ணும். 65

அண்டவாதம் கஉதாயம்

அலையுங் குவளைய லாறப் பொடித்தே
சிலையு மிளகுப்பொடி சேர்சரியாய் - மலையிற்
பெருங்காயம் கூட்டியுண்ணப் பெருமண்ட வாதம்
வரும்வாளை வண்டத்துக்கும் வாமே. 66

ரத்த பித்தத்துக்கு

பொற்றிடில் தோடையிலை பொரிந்ததொரு முந்திரிகை
சேர்ந்ததிடில் நல .... த்திடில் - மாதிரியாகக்
காரங் கூட்டி யருந்திய பின்னுக்
காரி ரத்தமும்பித் தம்மே. 67

போகுங்கால் ரத்தபித்தம் வோய்விடவே கான்மருந்து
யேகவே குகைநீறு கால்பலமும் - நாகமாம்
நிம்பழச்சார் வாங்கி நேகவரைத் தரைப்படி யாவின்
பாலில்கொள்ள ரத்தபித்தம் போமே. 68

சிட்டச் சீந்தில் நிலவேம்பு
    சிறுகாஞ் சோரி பாவட்டை
நட்டிப் பொருதும் முதாரி
    யுடனே கூட்டி நீர்விட்டு
திட்டந் துடனே யெட்டொன்றாய்
    செலுத்தச் சுரங்கள் சேராதே. 63

அண்ட வாதத்துக்கு கஉஷாயம்

காணும் புனல்மு ருங்கை
    கழச்சுக் காயின் பருப்புடனே
பூணு முடக்கொத்தா னுடனே
    போந்த சுக்கு -----
வேணுமெப்ப நீர்க்கியாழம்
    பருகியல் பருகியபின்
விண்ணில் அண்ட வாதம்
    போமென்று விட்டுப் போயிடுமே. 64

ரத்த பித்தத்துக்கு நெய் கைகண்டது

அருகம் வேரும் மஞ்சிட்டி
யதிவிடையம் குங்கு மப்பூ
யிகமும் மதுரம் முந்திரிகை
யிலாமிச்சு சந்தனம் யிலுப்பைப்பூவும்
10.அ.
திகமும் நெய்தல்க் கிழங்குமதில்
சேரு சந்தணம் தாமரைவளையம்
மதிகம்-வெள் ளருகுவேர் சக்கரை
சேரும் முத்தக் காசுடனே. 69

ரத்த வாந்திக்கு நெய் கிருதம்

உகமே யொவ்வொன்றுக்கு முக்கழஞ்சி
உகந்தா வின்பால் நாளாழி
சொகமாய் முன்னாய் நெய்கூட்டிக்
சேரப்பதமாய்க் காச்சி வடித்துண்ண
தகமாய் ரெத்த வாந்தியுந்தான
சலிச்சுப் போகுங் கண்டாயே. 70

அறுகஞ் சாறு தான்குறுணி
யகமே யாவின் பால்குறுணி
திகமும் நெய்தா னிருநாழி
சேரப் பதமாய்க்காச்சி வடித்துண்ண
அகமும் நாசி யுதிரத்தோன்றில்
அதுவே நசியம் பண்ணிநாலு
யிருஞ்செவியி லுதிரந் தோன்றி
வித்தை காதில் தான்விடவே. 71

முகமாய் சோதியி லுதிரந்தோன்றில்
விதமாய்க் கண்ணில் தான்விட்
வொகமாய் கண்டிலுதிரந் தோல்றில்
பதமாய்த் தண்டில் தாளைத்த
யிதமாய் மயிர்க்காலுத ரந்தோல்றில்
ஆ. விதமாய்மே லெங்குந் தான்பூச
வரையா பத்தியம் குளுத்தியாக
திரமாய் விளாயகர் பூசைபண்ணி
சேர்ந்த கிறுதந் தான்விடவே
யிதமாய்த் தோனும் ரெத்தவித்தம்
விட்டோடிப் போகுந் தப்பாதே. 73

சீதசுரம் வாத சன்னிக்கும் கஷாயம்

நன்னாக வேர்க்கொம்பு நற்சாரணை வேரு
மொன்னாய் சியாழமிட் டுண்டக்கால் - நன்னாக
வோடுமோ ரெத்த மொளியாமல் நாடுவிட்டு
வாடுமே கெட்டு மணம். 74

பாதிரியின் வேரும் முள்முன்னை முத்தம்
பற்படாகம் சிறுதேக்கு கண்டங் காலி
யோதரிய சித்தாமல்லி கடுக்காய் சுக்கு
யோஞ்சும் தாமரைவளையம் பேறா மல்லி
நீரிசிறு வழுதலையும் வில்வ வேரும்
நெருஞ்சிவேர் சமனாக் காச்சிக் கொள்ள
சீதசுரம் வாதசன்னி போமென் றீசன்
தெளிந்தறா வுரைத்ததிரு திண்ணந் தாலே. 75

பலகரப்பாலுக்கு கஷாயம்

கூசுஞ்-செங் சுத்தாரிப் பட்டை-திப்பிலி கூர்மிளகு
வீசுஞ்சிறு குறிஞ்சான்வேர் வெட்டி - காசினியில்
எண்ணியிடவே குடிநீ ரேற்கும் பலகரப்பான்
திண்ணமுடன் போமே தினம். 76

வீக்கத்துக்கு கஷாயம்

திரைத்தாளி சங்குசுரை சிறுநெருஞ்சி யிஞ்சி
மரைத்தால் நீர்முள்ளி யுள்ளி மாமலையில்
11.அ. கரைத்துவரின் வெங்காரம் மெல்பொடியாகும் குடிநீரருந்த
கண்கான வீக்கம் - போங் காண். 77

கிராணிக்கு கஷாயம்

செந்தங் கொத்துமல்லி தீதிலாம் பிச்சம்
முத்தங் சாந்து வில்வப்பிஞ்சு சமனாகக்
குருந்த சலம்விட்டு காச்சித்தாலே நீரில்கொள்ள
பெலத்துப் போங்கிராணி பேசு. 78

சுத்தநல் பொரியுஞ் சுக்குந்
தொத்துமகூ விளைவேர் கூட்டி
யித்தறக் காச்சிக் கொண்டு
விசையவே குடித்த போது
சத்தியும் மறகு றப்புந்
தாகமுந் தீரு மென்று
வித்தகா முன்வரி தானே
வேண்டியே விளம்பி னாரே. 79

சத்திக்கு கஉநாயம்

பயத்தினி லுமியைப் போக்கி
பரிவுள்ள நீரை விட்டு
வியப்புறக் காச்சிப் பின்னை
விரைந்துநீர் தன்னி னோடே
நயப்புற சீனி கூட்டி
நலம்பெறக் குடித்த போதே
தீர்வது தண்ணித் தானே. 81.

எரி குன்மத்துக்குக் கஷாயம்

சீந்தில் சுக்கு சிறுகுறந் தொட்டிவேர்
சாந்த வேலி யிலாமிச்சு சந்தனம்
போந்த கூவளை பொங்கிறு நாழிநீர்
காய்ந்த போதெரி குன்மங் கடக்குமே. 82

குடல்வாதத்துக்கு கஷாயம்

பயத்தொடு கடுக்காய் சுக்கு
பருத்திரு கழஞ்சு கொண்டு
வயத்த சுரந் தண்டு
மந்தம்குறுந் தொட்டி வேரும்
ஆ. நயக்கவே வெட்டிக் கூட்டி
நயம்பெறக் காச்சிக் கொள்ள
வியப்புறுங் கைகால் நின்று
வெரிகுடல் மறுகும் போமோ. 83

சத்தி குன்ம கஷாயம்

குமரிவேர் கொன்றை சுக்கு
    குலவு ரோகணியு மிந்துப்பும்
மாகுன்ம சாலே சீந்தி
    லான சந்ததி மதுரம்
தரமாய்க் காச்சிப் பின்னை
    தானது நுகர்ந்த போது
நிமிரமாஞ் சத்தி குன்மம்
    செய்குடல் மறுகும் போமே. 84.

உடலிது மறுகுன் டாகி
    யூத்துணர்ந் திருக்கு மாகில்
பொடிபட தகத்துச் சுக்கை
    போதவே கழஞ்சு கூட்டி
முட்டியிரு நாழி நீரில்
    மூன்றுநா ளிதனைக் காச்சி
குடியிது தீரு மென்று
    கூறினார் முனிவர் தாமே. 85

சுரோணித வாய்வு கஷாயம்

கொள்ளு முள்ளி கொடிய முருக்கிலை
12.அ. எள்ளுக் காய்-சுக் கிவையுஞ் சிவதைவே
ருள்ள தாகும் நீர்காழி யுழக்கதாய்
மெள்ளவே குடிவிடுஞ் சுரோணியே. 86

பேதி கஷாயம்

கடுக்களி-சுக் கிந்துப்பு காலம்தங் கோடங்கை
யடுக்களநீர் வர்ர்த்த ரைத்துக் குடிக்கில்
வளரின் வளமுலை மாதே
வயறுகள் குளகள் களகாய். 87

காசத்துக்கு கஷாயம்

பாரஞ்சிப் பட்டை பலமொன்று தன்னுடனே
கூர்மிளகு தான்பாதி கூட்டியே - தீர்பாவை
வீசுநீ ரெட்டொன்றாய் மேவிக்கு டித்திடவே
காசமெல்லா மச்சமறுங் கான். 88

விக்கல் சத்திக் கஷாயம்

தக்க நெல்பொரி தன்னிள நீருட
னொக்க விட்ட பயறுடன் கூவளை
மிக்கக் காச்சியபின் சர்க்கரைபோட் டுண்ண
விக்கல் சத்தியும் விரைந்துட னோடுமே. 89

அதிசாரக் கழிச்சலுக்கு கஷாயம்

மாதுளந்துளிர் மாந்துளிர் நாவலும்
தாதவிழ்ச் சடையா-ருட னஞ்சனம்
வீதிதன்னில் விளங்கிய நன்னுளாப்
போத வெந்துண்ணப் போமதி சாரமே. 90

பாவிலிற் பட்டை சுக்கு
வரச்சுண்டி பூலா வில்வம்
மேவிய முத்தக் காசு
ஆ. விளம்பிய கழஞ்சு கொண்டு
தாவிய தலத்திற் காச்சி
தான்குடித் திருவீ ராகில்
தூவிய வழும்பு ரெத்தந்
தூளெழுந் தோடிப் போமே. 91

பித்தக்கழிச்சல் அதிசாரத்திற்கு கஷாயம்

அத்திப் பட்டை வாழைப்பூவு
    அமரத் துவைத்துப்புட்டாக்கி
பொத்துப் பிடித்துப் பிழிந்துகொண்டு
    புதியதி விடையம் மேல்விசிரி
மெத்தச் சீனி தனைக்கூட்டி
    மிகவும் பருக வல்லீராய்
பித்தக் கழிச்சல் அதிசாரம்
    புறப்பட் டோடுங் கண்டாயே. 92.

இப்பொன்னார் தம்மி னோடு
    யிரும்புதோல் முத்தங் காசு
பற்படாகஞ் சீந்தில் சுக்கு
    பைய்யவே நெய்ய வெந்து
அப்பினார் தேனி னோடே
    அளவினா ரென்னைக் கேட்டு
வெப்பினார் சீத நாரை
    விளவினார் விடைகொண் டாரே. 93

சன்னிக்கு கஷாயம்

சுக்கு சீந்தில் சிறிய வழுதலை
யொக்கக் கண்டிரு நாழி யுழக்கதாய்
தக்க நீரது தாலே குடித்திட
மிக்கதோர் சன்னி விட்டிடு முண்மையே. 94

இருமலுக்கு கஷாயம்

ஆடாதோடை தேள்கொடுக்குத் தூ தளை
வாடா சுக்குடன் வல்லிதன் கொண்டைவேர்
13.அ. நீடா திப்பிலி நீர்பொடி யிட்டிட
வோடா தாகிலு மோடு மிருமலே. 95

கோஷ்ட்ட முடனே சிறுதேக்கு
கோரைக் கிழங்கு நிலவேம்பு
தேட்ட மாக மிகுசிந்தில்
சேருங் கண்டங் காரிசுக்கு
நாட்ட மாக பற்படாகம்
சிறுகாஞ் சோரி சொரியதாலும்
வாட்ட மாகத் திப்பிலியும்
வளர்ப றங்கிக் குடிநீரே. 96

அண்ட வாய்வுக்கு சஉநாயம்

கண்டசுக்கு கடுகுடன் ரோசினி பெய்பதடல்
விண்டதேக்கு மிளகு முடக்கொத்தான் கொத்துமல்லியுங்
கொண்டை நீரைக் குறுக்கிக் குடிப்பீராய்
அண்ட வாயுவும் அரோசிக மதிருமே. 97

சிறுகாஞ் சோரி நன்னாரி
தெய்வப் பெண்டி ருடனே
குறுகா தரைத்து உண்டைபண்ணி
கொடிய சுரத்துக் கிடுவீராய்
மறுநாள் வாராது வாதமொடு
வயறு நோவு குன்மமுடன்
தறுகா தளவும் விழிமடவீர்
தரணி யோருக் குரையீரே. 98

இரதம் நாபி கெந்தகமு
    யியல்சா திக்காய் லவணமஞ்சும்
துதிசேர் சீனக் காரமுடன்
    சுவானுட பீசம் வெண்ரோ
ஆ. மதிக சீத மிரண்டுடனே
    யப்பிரே கந்தால் சரிகூட்டி
குரிகோ ளிஞ்சிச் சாறதனிற்
    கூட்டி யரைத்து உண்டைசெய்யே. 99

துத்தந் துருசு பாஷாண
மேத்திய கொதிமிகு ரசவகையும்
பத்திய பாகல் சாற்றி லரைத்து
தித்திய மிளகள வுண்டைகள் செய்யே. 100

சீத சுரங்கள் செப்பக் கேள்
ஓதிய செந்தி யுயாச வாளங்
கோதறு திரிகடு கொடுகடு சிவதை
மாதரை பாலில் மாத்திலை செய்யே. 101

பிரியா கூந்தல் கொடிவேலி
    முருங்கைப் ச் பட்டை குளவிந்தம்
கொதியா வெந்தக் கழைபருப்பு
    கொள்ளுங் கானச் சாறுடனே
விதியா வந்த விரைவாதம்
    வெறுமை கண்ட வேசியைப்போல்
குதியா தாகில் போற்நகற்றைக்
    கொடுப்பே சுதியில் கொடுப்பேனே. 102.